**IN THE COURT OF THE I-ADDITIONAL DISTRICT COURT, RANIPET.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**OS.No.196/2024 - PW-1**

| | |
|---|---|
| Name | திரு.பாபு |
| Father Name | திரு.பொன்னம்பலம் |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 27.10.2025.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:-**

நான் 9–ம் வகுப்பு வரை படித்துள்ளேன். தமிழில் ஓரளவிற்கு எழுதப்படிக்கத் தெரியும். நான் வாகன ஓட்டுநராகவும், மோட்டார் வாகனங்கள் வாங்கி விற்கும் தொழிலும் செய்து வருகிறேன். நான் மோட்டார் வாகனங்கள் வாங்கி விற்கும் தொழில் செய்து வருவதாக என்னுடைய வழக்குரையிலும், நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லியிருக்கிறேன். நான் வருமானவரி செலுத்துவதில்லை. நான் திருவலத்தில் குடியிருந்து வருகிறேன். பிரதிவாதி சீக்கராஜபுரத்தில் வசித்து வருகிறார். பிரதிவாதியின் விலாசம் என்னவென்றால் க.எண்.630 ஆகும். தெரு பெயரில்லை. பிரதிவாதியின் கணவர் இறந்துவிட்டார். பிரதிவாதியின் குடும்பத்தில் பிரதிவாதியின் 2 பெண் குழந்தைகள் இருக்கிறார்கள். பிரதிவாதியின் அண்ணன் கௌஸ்பாஷா எனக்கு பழக்கமானவர் என்ற வகையில் பிரதிவாதியை தெரியும். அவருடைய குடும்பத்தில் யார் யார் இருக்கிறார்கள் என்று எனக்கு தெரியாது. பிரதிவாதி என்ன வேலை செய்கிறார் என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கில் பிரதிவாதி எதிர் வழக்குரையில் சொல்லியுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். நான் என்னுடைய பணத்தை தான் கடனாக பிரதிவாதிக்கு கொடுத்தேன். என்னுடைய வழக்குரையிலும், நிரூபண வாக்குமூலத்திலும் பிரதிவாதி கேட்ட பணத்தை ஏற்பாடு செய்து கொடுத்ததாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். என் நண்பர் மதிவாணன் என்பவரிடமிருந்து பணத்தை பெற்றுக் கொடுத்தேன். எனக்கு சொந்தமான பணத்தோடு சேர்த்து, மதிவாணனிடமிருந்து பெற்ற பணத்தையும் சேர்த்து பிரதிவாதிக்கு கடனாக கொடுத்தேன். மதிவாணனிடமிருந்து ரூ.4லட்சம் பெற்றேன். அந்தப் பணத்தை வட்டிக்கு வாங்கினேன். பிரதிவாதிக்கு பணம் கொடுத்ததாக சொல்லும் சமயத்தில் என்னிடம் ரூ.5லட்சம் பணமிருந்தது என்பதை காண்பிக்க வங்கி கணக்கு புத்தகம் உள்ளதா என்றால் வங்கி கணக்கில் வைத்திருக்கவில்லை. என் மனைவியின் சொத்தை விற்ற பணத்திலிருந்து பிரதிவாதிக்கு கடன் கொடுத்தேன். என்னுடைய வியாபாரத்திலிருந்து வந்த வருமானத்தைக் கொண்டு பிரதிவாதிக்கு கடன் கொடுத்தேனா என்றால் வியாபாரத்திலிருந்து

வந்த பணத்தை கொடுக்கவில்லை. பிரதிவாதியின் பெயர் ஷபினா (எ) ஷபினா பீ ஆகும். பிரதிவாதியின் அந்த பெயரில் அடையாள ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மதிவாணன் என்பவரிடமிருந்து ரூ.4லட்சம் பணத்தை ஜனவரி 2024–ல் வாங்கினேன். அவரிடமிருந்து அந்த பணத்தை பெற்றதற்கு நான் அவருக்கு ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளேன். மதிவாணன் என்பவர் இரும்பு வியாபாரம் செய்து வருகிறார்.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)

BALAKRISHNAN

Digitally signed by BALAKRISHNAN
DN: cn=BALAKRISHNAN, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

I Additional District Judge,
Ranipet.